அவர்களுடைய குறிப்புகளை மேற்கோள்காட்டி, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்வதோடு டீசலை மத்திய அரசு ரூ. 2.90க்கு குறைத்துக் கொடுத்தால், அதை அவர்களுக்கு வழங்குவதில் இந்த அரசுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள எண்ணூர் அனல் மின் நிலையம், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு 4 அல்லது 5 மாதங்களுக்கு முன்பே பழுதுபட்டிருந்தும், இதுகாறும் அது சீர் செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது. அதைச் சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும், எவ்வளவு விரைவில் அது சீர்செய்யப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் விரைவாக சீர்செய்வதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே மேலும் ஒரு யூனிட் பழுதடைந்து, அதுவும் சீர் செய்யப்பட்டு தற்போது மின் உற்பத்தி நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அதன் வேலைகள் முடிவடைந்து 15 நாட்களுக்குள்ளாக ஒரு யூனிட்டும், 7-வது மாதத்தில் இன்னொரு யூனிட்டும் செயல்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பேரவையின் விவாதங்கள் இடையூறுகள் இல்லாமல் சுமுகமாக நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையின்மீது முக்கியமான பொது விவாதம் முடிந்து, ஒவ்வொரு மானிய மாக

எடுத்துக்கொண்டு மக்களுடைய பிரச்சினைகள் மீது தீவிரமான விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற சமயம் இது. மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புகள் அதிகமாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இங்கே நடைபெறும் விவாதங்களில் ஒரு துளி நேரம்கூட, இந்த சபையின் நேரம் ஒரு துளி கூட வீணாகக் கூடாது— அநியாயமாகப் போகக் கூடாது. விதிமுறைகளுக்கு, கட்டுப்பாடுகளுக்கு மாறாக இந்த சபை போகக் கூடாது என்பதை நான் மட்டுமல்ல எங்கள் கட்சி சார்பிலேயே உங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து உறுப்பினர்களும், அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அதைத்தான் விரும்புகிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். இந்த நிலைமையில் தலைவரான தாங்கள் முக்கியமானதொரு பொறுப்பிலிருந்து கொண்டு எங்களுடைய உரிமைகளைப் பரிபூரணமாகப் பாதுகாக்கிறீர்கள். அந்த நிலைமையில் தற்போதைய விவாதங்களில் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் நாம் செயல்படுவதற்கும் தொடர்ந்து விவாதத்தைக் கொண்டு போவதற்கும் உறுதி செய்தாக வேண்டும். குறிப்பான பிரச்சினைகளான கடுமையான வறட்சியும், மோசமான உணவுத் தட்டுப்பாடும் வரும் அபாயம் இருக்கிறது என்கிற இந்தச் சமயத்தில் ஜனங்களுடைய எதிர்பார்ப்பை இங்கே பிரதிபலிக்கிற முறையில் நடக்கிற விவாதத்தை ஒழுங்காகத் தாங்கள் நடத்தி வைத்திட உங்களோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பரிபூரணமாக ஒத்துழைக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்த அவையினுடைய நேரத்தில் ஒரு நிமிஷத்தைக் கூட நஷ்டப்படுத்துகிற வகையில் எங்கள் பக்கத்திலிருந்து எந்த ஒரு நடவடிக்கையும் வராது என்று நான் உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில் உங்களிடமிருந்து பாதுகாப்பையும் எதிர்பார்க்கிறோம். அரசும் இதற்குத் தகுந்த மாதிரி சில நடவடிக்கைகளை எடுத்து இந்த உத்திரவாதத்தைத் தர வேண்டும். சபையும் அமைதியாக நடக்க வேண்டும். சட்ட மீறலும், விதி மீறலும், தவறுகளும் நடக்காமல் நடைபெற வேண்டும் என்ற கருத்தை எங்கள் கட்சியின் கருத்தாக, நேற்றையதினம் கூடிய கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் தங்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன். இதை my Submission on behalf of my party என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய உணர்வுகளை இந்தப் பேரவை மதிக்கிறது. பேரவையின் நிகழ்ச்சியைச் சுமுகமாக நடத்த அனைத்து உறுப்பினர்களின் ஆதரவையும் வேண்டுகிறேன். இனிப் பேரவையின் நிகழ்ச்சிகள் ஒழுங்காக நடைபெறும் என்று தெரிவித்துக்கொண்டு அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் போகலாம். (குறுக்கீடு).